திருவள்ளுவர் ஆண்டு 2045

மே - 2015

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 59
பகுதி : 07

விலை ரூ.10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A.,	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS	துணைத் தலைவர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	உறுப்பினர்
திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. க.சி. அகமுடைநம்பி B.E.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L.,	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. பெ.சந்திரசேகரன்	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59

பகுதி : 07

மே : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள்கட்டணம்	ரூ. 1,000	ரூ. 6,000
புரவலர் கட்டணம்	ரூ. 5,000	ரூ. 10,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

செயலாளர்

ச.மாரியப்ப முரளி, எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.

பொருளடக்கம்

1. இனவரைவியல் நோக்கில் புறநானூறு **4**

முனைவர் **சு.விஜயன்**

2. பாலைத்திணையில் பொழுதுகள் **20**

இல.மங்கலட்சுமி

(முனைவர் பட்ட ஆய்வாளர்)

3. பாவேந்தர் பிள்ளைத்தமிழ் **25**

முனைவர் **நெல்லை. ந.சொக்கலிங்கம்**

4. தேவார இலக்கியத்தின் தோற்றமும் சமூகப் பின்புலமும் **37**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முனைவர் **உ.கருப்பத்தேவன்**

இதழ் மணம்

இவ்விதழில் பேராசிரியர் சு.விசயன் அவர்கள் புறநானூற்றில் ஐந்திணை சார்ந்த இனப்பரப்புப் பற்றிய அறிவியல் விளக்க ஆய்வுக்கட்டுரை ஒன்று எழுதுகிறார். இக்கட்டுரை சங்க காலத்து மக்கள் ஐவகை நிலம் சார்ந்த வாழ்க்கையில் அன்றாடம் தங்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருட்களைச் சேகரித்த முறை, அதற்குப் பயன்படுத்திய கருவிகள், கலை, இலக்கியம், கல்வி சார்ந்த அவர்களுடைய வாழ்க்கைச் சூழல், தங்களை ஏற்றுப் போற்றும் வள்ளல்கள், ஈகை நெஞ்சம் படைத்த வீரம் செறிந்த புரவலனை நாடிச்செல்லும் கலைஞர்கள் இன்னோர் அன்ன செய்தி களை புறநானூற்றில் காணலாம். ஒருபக்கம் வில்லும் அம்பும் பயன்படுத்தும் ஆற்றல்; மறுபக்கம் யாழும் குழலும் ஆடலும் பாடலும் வல்ல கலைஞர்கள் கலை உள்ளம், இவற்றிற்கிடையே ஒரு சமுதாயம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளை நகர்த்தியுள்ளது. அச் சமுதாயத்தின் வரலாற்றுப் பதிவு புறநானூறு.

நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்கள் **"பாவேந்தர் பிள்ளைத் தமிழ்"** என்னும் புலவர் புலமைப்பித்தன் அவர்களுடைய கவிதை இலக்கியத்தை நிரல்படவும் சுவைபடவும் எழுதியுள்ளார். பாவேந்தர், புலமைப்பித்தன் இருவருடைய கவிதைகளை இடை இடையே தந்து வாசகர்களைத் தன்னை மறந்து படிக்கத் தூண்டும் நடை நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்களுடைய எழுத்து. அரிய திறனாய்வுக் கட்டுரை; பாரதிதாசன், புலமைப்பித்தன் இருவரைப் பற்றியும் பேராசிரியர் ந.சொக்கலிங்கம் நயம்பட எழுதியுள்ள சிறப்பு பாராட்டற்குரிய தாகும். பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்ட மறந்த நேரத்தில் ஆசிரியர் திறம்படப் பாராட்டியிருப்பதும் செந்தமிழில் கட்டுரை வெளிவருவதும் மகிழ்ச்சியளிக்கிறது.

இறுதியாக ஆய்வு மாணவர் இல.மங்கலட்சுமி எழுதிய பாலைத் திணையில் பொழுதுகள் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது.

இனவரைவியல் நோக்கில் புறநானூறு

முனைவர் **சு.விஜயன்**. எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்டி.,
டிப்.இன்.ஜெர்னலிசம்., டி.ஜி.டி.,

ஒரு சமூகத்தின் தத்துவார்த்த விழுமியங்களை அடுத்த தளத்தை நோக்கி நகர்த்தும் ஆக்கப்பூர்வ விளைவுகளில் ஒன்று ஆய்வு. அது தமிழ் அறிவுசார் மரபில் ஒரு பண்பாட்டு வடிவமாக இருந்து வருகிறது. *2000* ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுத் தொன்மை வாய்ந்த தமிழ் இனத்தின் பண்பாட்டு அசைவாக் கங்களை அத்தகைய ஆய்வுகள் துல்லியமாக புறஉலகிற்கு எடுத்துக்காட்டும் விதமாக அமைந்து வருகின்றன. பண்பாட்டின் அடிப்படைகளை அறிந்துகொள்ள வரலாற்று ஆவணமாகத் திகழ்பவை இலக்கியங்கள் ஆகும். அதிலும் தமிழரின் வரலாற்று ஆவணங்களாக விளங்கும் சங்க இலக்கியங்களைப் பண்பாட்டு ஆய்வுகளுக்கு உட்படுத்துவதன் வழி தமிழர் தொல்கூறுகளை பண்பாட்டு விழுமியங்களின் தொடர்ச்சியை அறிந்து வெளிப்படுத்த இயலும். சங்க இலக்கியம் தொடர்பான அண்மைக்கால ஆய்வு களில் பலபுதிய போக்குகள் பதிவாகியுள்ளன. மானிடவியல், சமூகவியல், பண்பாட்டியல் ஆகிய புலங்கள் சார்ந்த சிந்தனை களை உள்வாங்கிச் சங்க இலக்கியங்களைப் பொருள்கொள்ளும் முயற்சிகள் நடந்துள்ளன. அவ்வகையில் மானுடவியல் புலங்களுள் ஒன்றான இனவரைவியல் அடிப்படையில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றைப் பொருள்கொள்ளும் முயற்சியாக இக்கட்டுரை அமைகின்றது.

இனவரை வியல் - விளக்கம்

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மேலைநாட்டுக் கல்விப்புலங்களில் அறியப்பட்ட மானுடவியல் (Anthroplology) துறையின் ஒரு உட்பிரிவே இனவரைவியல் அல்லது இனக் குழுவியல் எனப்படுவது ஆகும். இனக்குழு என்னும் பொருளு டைய Ethnography என்னும் ஆங்கிலச்சொல் ‘Ethnos’, ‘graphein’ ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. Ethnos என்பதற்கு இனம் இனக்குழு (Ethic group) மக்கள் என்பது பொருள்.

Graphein என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப்பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை இனக்குழுவியல் என்றும் கூறலாம்."1

பண்பாட்டு ஆய்வுகளுக்கு இனவரைவியல் அடிப்படை யானதாகும். ஒருகுறிப்பிட்ட இனக்குழுவை அல்லது பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியல் இனவரைவியல் என்று அழைக்கப்படுகிறது (Fefterman 1989 - 11) இது ஒரு குழு அல்லது ஓர் இனக்குழுவை நேரடியாக ஆய்வுக்குட்படுத்தும் முறையியல் ஆகும். பண்பாட்டை எழுத்து வடிவில் தொகுத்து அளிப்பதே இனவரைவியலின் நோக்கமாகும். இதனால் ஏதேனும் ஒரு பண்பாட்டைப் பற்றி எழுதப்பெற்ற வரைவு அல்லது வருணனையை இனவரைவியல் என்று அழைப்பர் (Herskovits 1974.8) இவ்வாறு இனவரைவியல் என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். இதன்வழியாக ஓர் இனக்குழு மக்களின் முழுமையான வாழ்வியல் செயல்பாடுகளின் தொகுப்பே இனவரைவியல் என்பதாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது.

இனவரைவியல் இரண்டு வகையான பரிமாணங்களைக் கொண்டது. ஒரு பக்கத்தில் அது ஒரு முறையியலாகவும் மறு பக்கத்தில் வரிவடிவமாக்கப் பெற்ற பண்பாடாகவும் அமைகின்றது. யாரைப்பற்றி எழுதுகிறோமோ? அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்கவுரைகளையும், வரைவு அறிக்கை களையும் உருவாக்கக்கூடிய அலசல் முறையும் அதன் வெளிப் பாடாகிய எழுத்து வடிவமுமே இனவரைவியல் (Denzin 1977) என்பது அதன் பரிமாணங்கள் விளக்கப்படுகின்றன. ஒருபண்பாட்டை வெளிப்படுத்த இனவரைவியலாளர்கள் சில வகையினங்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

"பண்பாடு என்ற முழுமையைப் பல்வேறு சிறுசிறு கூறுகளாக அடையாளம் கண்டு வருணிப்பதன் மூலம் விளக்க முயல்கின்றார். அவ்வகையில் புவிச்சூழலியல் (Topography), சுற்றுச்சூழல் (Environment), காலநிலை (Climate), குடியிருப்புமுறை

(Settlement Pattern), பொருள்சார் பண்பாடு (Material Culture), குடும்ப அமைப்பு, திருமணமுறை, உறைவிடமுறை, வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்க முறை, மக்களின் உளவியல் பாங்குகள், மணக்கொடை (வரதட் சணை), மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற் பகுப்புமுறை, உற்பத்திமுறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்றமுறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறைகள், அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறை, மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், நாட்டார் வழக்காறுகள் ஆகிய கூறுகளை இனவரைவியலாளன் செய்திகள் திரட்டுவதற்காக முதன்மைப்படுத்துகிறான்" என்று இனவரைவியலாளன் முதன்மைப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளை பக்தவத்சலபாரதி எடுத்துக்கூறுகின்றார்.

இனவரைவியல் கோட்பாட்டில் புறநானூறு

தமிழ்க் கவிதையியல் என்பது அடிப்படையில் இனவரை வியல் கூறுகளை முழுமையாக எடுத்துக்கூறும் ஓர் அமைப்பு முறையாகும். அதற்கான அடிப்படைக் கோட்பாடாக தொல் காப்பியம் கூறும் முப்பொருள் கோட்பாடாகும். இதனைக் கொண்டே தமிழ்க் கவிதைகளில் இனவரைவியல் கூறுகள் இடம்பெற் றுள்ளதை நம்மால் அவதானிக்க முடியும். குறிப்பாக கருப்பொருள் அட்டவணை என்பது அவ்வவ் நிலத்தின் மக்கள், குடியிருப்பு, உணவு, புழங்குபொருள் என்ற இனவரைவியலின் ஒவ்வொரு கூறுகளைப் பற்றிப் பேசுகின்றது. எட்டுத்தொகை நூற்களுள் ஒன்றான புறநானூற்றில் முடியுடை மூவேந்தர்களின் போர் வெற்றி, கொடை முதலிய பண்புகள் பேசப்பட்டாலும் அதற்கு எதிரிடையாக எளிய மக்கள் தொல்சமூக இனக்குழு எச்சங்களை உள்ளடக்கிய குறுநில மன்னர்கள், சிறூர் மன்னர்கள், முதுகுடி மன்னர்கள், கணசமூகமாய் வாழ்ந்த மக்கள் முதலானவர்களின் வாழ்க்கை குறித்த பதிவுகளும் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் கணசமூகமாக குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களில் வாழ்ந்த கானவர் அல்லது வேட்டுவர், ஆயர் அல்லது இடையர் ஆகிய இனக்குழுக்களின் வாழ்வியல் கூறுகளில் அமைந்துள்ள பண்பாட்டுப்

பொருண்மைகளை இனவரைவியல் கோட்பாட்டு பின்புலத்தில் இங்கு காண்போம்.

தமிழக மலை, காட்டுப்பகுதிகளில் (வறட்சியடைந்த குறிஞ்சி முல்லை நிலங்கள்) வேடர், எயினர், மழவர், மறவர் என்ற பெயர்களரல் சுட்டப்படும் வேடர்கள் இனக்குழு வாழ்க்கை முறையில் வாழ்ந்து வந்ததைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களையும் இவர்களுடைய வாழ்க்கையையும் சங்ககாலப் புலவர்கள் தங்களது சமகாலத்து நிகழ்வாக நோக்கி வறுமை, கொடுமை, களவு, மறம், முரட்டுப்பண்பு மற்றும் புலவன்சார் வாழ்க்கையாக நன்மைக்கு எதிரான தீமைக்கு மதிப்பீடு செய்துள்ளார்கள். சில புலவர்கள் இவர்களுடைய குழு வாழ்க்கையின் மனித இணக்கம், விருந்து பேணுதல், குருதி உறவு, பகிர்ந்து உண்ணல், உடல் வலிமை, வீரம், வேந்தர்க்கு அஞ்சாமை, பாணர், இரவலரிடம் பரிவு என்று நேர்மறையாக மதிப்பீடு செய்துள்ளார்கள். இம்மதிப்பீடுகளின் வழி, சங்ககால மக்களின் ஆளுமை மட்டுமின்றி, அவர்களின் வாழ்வியல் முறைகளும், பண்பாட்டு நிகழ்வுகளும் ஏனையோருக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

கானவர் தினை விதைப்பு

குறிஞ்சியையும் முல்லையையும் உள்ளடக்கிய திணை நிலைச் சமூகத்தில் கல்லும், வில்லும், கைத்தடியும் கொண்டு வேட்டையாடித் திரிந்த மனிதன் உணவுக்காக தானிய சாகுபடி முயற்சியில் ஈடுபட்டான். அப்போது அவன் பயிர் சாகுபடி பற்றி ஏதும் அறியாத நிலையில்தான் இருந்தான். அந்நிலையில் அனுபவம் சில பாடங்களை அவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கும். கட்டாந்தரையில் விதைகளைப் போட்டால் பறவைகள் அவற்றைப் பொறுக்கித் தின்றுவிடுதல் கூடும். எறும்புகளும் இழுத்துச் சென்றுவிடும். மேலும் மழைபெய்யும் போது மழைநீர் விதைகளை அரித்துச் சென்றுவிடுதல் கூடும். எனவே நிலத்தைக் கிளறிப் புழுதியாக்கி அப்புழுதியில் விதைகளை விதைக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டான். இந்நிலையில் நிலத்தில் கிடக்கும் கிழங்குகளைத் தின்பதற்காகப் பன்றிகள் மண்ணைத் தோண்டிக் கிளறிப் புழுதியாக்கியிருப்பதைக் கண்டான். அவ்வாறு

பன்றிகளால் கிளறிப் புழுதியாக்கப்பட்ட இடங்களில் கானவர் மழைக்காலத்தில் தினை விதைத்தனர். அங்ஙனம் விதைத்த தினை முளைத்து வளர்ந்து விளைந்தது. இதனை,

"அருவியார்க்கும் கழைபயில் நனந்தலைக்
கறிவளரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளரக் கிண்டி, கிளையொடு,
கடுங்கண் கேழல் உழுத பூழி,
நன்னாள் வருபதம்நோக்கி, குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்து விளையாணர்" (புறம். 168)

அருவி ஒலித்துப் பாயும் மூங்கில் வளர்ந்த அகன்ற இடத்தையுடைய மிளகுக்கொடி வளரும் மலைச்சாரலினிடத்து மலர்ந்த காந்தளினது கொழுவிய கிழங்கு பிறழக் கிளறித் தன் இனத்தோடு கூடித் தறுகண்மையுடைய பன்றிகள் உழுத புழுதியில் நல்ல நாள் வந்த செவ்வியைப் பார்த்துக் குறவர் அந்நிலத்தை உழாமல் அதுவே உழவாக வித்திய பரிய தோகையுடைய சிறிய தினை முற்பட விளைந்த புதிய வருவாயாகிய கதிர் என்பதாகக் குறிப்பிடுகிறது. இதில் இனவரைவியல் கூறுகளுள் ஒன்றான ஒருசமூகக் குழுவின் உற்பத்தி முறை எவ்வாறு இருந்தது என்பது பெறப்படுகின்றது. நிலத்தின் தன்மைக்கேற்பவும், அங்கு நிகழும் நிகழ்ச்சிக்கேற்பவும் மக்கள் தங்கள் உற்பத்தி முறையை அமைத்துக் கொண்டனர்.

நிலத்தைக் கிளறிப் புழுதியாக்கிப் பண்படுத்திச் சாகு படிக்குப் பயன்படுத்த முடியும் என்பதைக் காலமும் அனுபவமும் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தன. மக்கள் தொகைப் பெருக்கமும் உணவுப் பற்றாக்குறையும் கூடுதலான நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். ஆனால் காட்டை வெட்டி அழிப்பதற்கும் நிலத்தை உழுவதற்கும் அவனிடம் கருவிகள் ஏதும் இல்லை. கற்கருவிகளும் கைத்தடியும் வில்லுமே அவனிடமிருந்த கருவிகள் இரும்பைப் பற்றி அம்மனிதன் அறிந்திருக்கவில்லை. அதன் உபயோகம் குறித்து அவனுக்கு எதுவும் தெரியாது. ஆனால் நெருப்பின் உபயோகத்தை அவன் நன்கு அறிந்திருந்தான். எனவே புதர் மண்டிக்கிடந்த நிலங்களைத் தீயிட்டு அழித்தான். அவ்வாறு

அழித்துத்தான் நிலத்தைச் சாகுபடிக்கு ஏற்றதாகத் திருத்திப் பண்படுத்தினான். திருத்திய நிலத்தில் வரகும் தினையும் பயறும் விதைத்தனர். இச்செய்திகளைச் சங்க நூல்கள், புறநானூறு தெளிவுபட எடுத்துக்கூறுகின்றது என்பதை,

"கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை,
ஐவனம் வித்தி, மையுறக் கவினி,
ஈனல் செல்லா ஏனற்கு முமெனக்
கருவி வானம் தலைஇ" (புறம். 154)

என புறநானூற்றின் 159வது பாடல் குறிப்பிடுகின்றது. வேட்டுவர் சுடப்பட்டுக் கரிந்த காட்டை மயங்க உழுத அகன்ற இடத்தையுடைய கொல்லைக்கண் மலை ஐவனநெல்லோடு வித்தி இருட்சியுற அழகுபெற்றுக் கோடை மிகுதியில் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு இழுமென்னும் ஓசையுடன் மின்னலும் இடியும் முதலாகிய தொகுதியுடைய மழைத்துளி சொரிந்தது என்று கூறும் இப்பாடல் முல்லைநிலத்தவரின் புராதன வேளாண்மை முறையான காட்டெரிப்பு வேளாண்மை அல்லது எரிபுன வேளாண்மை என்பதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மருதம் மற்றும் நெய்தல் நிலப்பகுதிகளில் வாழ்பவர்கள் இவ்விதமான முறையைப் பின்பற்றுவதில்லை. முல்லை மற்றும் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த வேட்டுவர் அல்லது கானவர் எனப்படும் தனியொரு இனக் குழுவிற்கு மட்டுமான உற்பத்திமுறை என்பதில் ஐயமில்லை. இதனோடு தொடர்புடையதாகவே தினைவிதைத்தல், தினைப்புனம் காத்தல், களைபறித்தல், கிளி கடிதல், கதிர் அறுத்தல், தினை குற்றுதல் முதலியவை அகப்பொருட் துறைகளோடு அகவாழ்வுடன் இணைத்துச் சொல்லப்பட்டன.

வேட்டுவர்களின் வில்லாற்றல்

இனவரையியல் கூறுகளுள் ஒன்றான புழங்கு பொருட்களின் வழி ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு இயங்குநிலையை அறிந்து கொள்ள இயலும். அப்புழங்கு பொருள் அவர்களின் வாழ்க்கை யோடு எவ்வாறு தொடர்புடையதாக பண்பாட்டின் அம்சமாக விளங்குகிறது என்பதனை இனவரைவியலாளர்கள் ஆராய்ந்து முதன்மைத்தரவுகளாகக் கொள்கின்றனர். அவ்வகையில் முல்லை

நில வேட்டுவர்களின் வாழ்வியலில் முக்கிய இடம் பெறும் பழங்குபொருள் வில் ஆகும். மனிதன் காட்டுமிராண்டி நிலையிலும் அநாகரிக நிலையிலும் வாழ்ந்த காலகட்டத்தில் வில்லும் அம்பும் கண்டுபிடிக்கப்பட்டு வேட்டைக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டத்தில்தான் "வில்லும் அம்பும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று எல்கல்ஸ் அவர்கள் கருதுகிறார்கள். இது குறித்து அவர்கூறும் பொழுது வில்லும் அம்பும் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து காட்டுமிராண்டி நிலையின் தலைக்கட்டம் தொடங்குகிறது. இதனால் காட்டு மிருக இறைச்சி ஒழுங்காக சாப்பாட்டுக்குக் கிடைக்கிற உணவுப்பொருளாக அமைந்தது. வேட்டையாடுதல் ஒரு வழக்கமான தொழிலாயிற்று என்பதாகக் குறிப்பிடுகிறார்."

வேட்டுவர்கள் வில்லாற்றலில் சிறந்து விளங்கினர். அதற்கு கணசமூகத் தலைவர்களில் ஒருவனான் வல்வில் ஓரியின் வில்லாற்றலே சிறந்த சான்றாகும். ஓரி என்பவன் கொல்லிமலைத் தலைவன். அவன் தன் வில்லாற்றல் காரணமாகப் புலவர்களால் வல்வில் ஓரி என்று சிறப்பிக்கப்பட்டான். அவனது வில்லாற்றலை வன்பரணர் புறப்பாடல் ஒன்றில் வியந்து போற்றுகிறார்.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ
புழல் தலைப் புகர்க் கலைஉருட்டி, உரல்தலைக்
கேழற்பன்றி வீழ அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும்.
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்,
புகழ்சால் சிறப்பின் அம்பு மிகத் திளைக்கும்
கொலைவன்" (புறம்.152)

எனும் பாடலில் யானையைக் கொன்று வீழ்த்த சிறந்த தொடையையுடைய அம்பு, பெரிய வாயையுடைய புலியை இறந்து படச் செய்து, துளை பொருந்திய கொம்பையுடைய தலையினை யுடைய புள்ளிமான் கலையை உருட்டி உரல்போலும் தலையை யுடைய கேழலாகிய பன்றியை வீழச்செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கட் கிடக்கும் உடும்பின் கண்சென்று தெரியும் வல்வில்லால் உண்டாகிய வேட்டத்தை வென்றிப் படுத்தி

யிருப்பவன் புகழமைந்த சிறப்பினையுடைய அம்பைச் செலுத்தும் தொழிலில் மிகச்சென்று உறுதற்கு காரணமாகிய கொலைஞன் என்று ஓரியின் வில்லாற்றல் வியந்து போற்றப்படுகின்றது. ஓரியின் வில்லாற்றல் என்பது தனித்த ஒருவனுடைய ஆற்றல் என்று மட்டும் பொருள்படாதது. வேட்டுவ சமூகமரபில் வில் பெற்றுள்ள இடம் அதனைப் பயன்படுத்தும் பாங்கு போன்றவை சிந்திக்கத்தக்கன. மருதநில உழவனுக்கு ஏர் எவ்விதமான பயனும் பண்பாட்டுப் பொருண்மையும் உள்ளடக்கியதோ அதுபோன்றே வேட்டைச் சமூகத்தில் வில் ஆகும். அதனைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாதவன் முல்லைநிலத்தில் தனது வாழ்வை எதிர்கொள்வது இயலாத ஒன்று ஆகும். எனவேதான் அவர்களின் புழங்கு பொருட்களில் வில் முதன்மையானதாகப் பேணப்பட்டு அப்பயிற்சி வேட்டுவக் குடியின் சிறார்களுக்கும் முறையாகக் கற்றுக்கொடுக் கப்பட்டது.

வேட்டுவச் சிறுவர் விளையாட்டுப் பருவத்திலேயே விற்பயிற்சியைத் தொடங்கி விடுவர். வளார்களில் மரற்கயிற்றைப் பிணித்து வில்லாகச் செய்வர். உடை வேலமரத்தின் உள்ளே புழையுடைய வெள்ளிய முள்ளை ஊகம் புல்லின் நுண்ணிய கோலிற் செருகி அம்புகளாகச் செய்வர். அவ்வம்புகளை வில்லில் தொடுத்து எய்து விளையாடுவர். இது குறித்தப் புறநானூறு அழகாகப் பேசுகிறது.

"உழுதுஊர் காளை ஊழ் கோடு அன்ன
கவைமுட் கள்ளிப் பொரி அரைப்பொருந்தி,
புதுவரகு அரிகால் கருப்பை பார்க்கும்
புன்தலைச் சிறாஅர் வில்எடுத்து ஆர்ப்பின்,
பெருங்கட் குறுமுயல் கருங்கலன் உடைய
மன்றில் பாயும் வன்புலத்ததுவே" (புறம்.322)

எனும் பாடலில் வன்புலமாகிய முல்லை நிலத்தில் வாழும் வில்லேருழவரான வேட்டுவர்களின் சிறுவர்கள் வரகுக் கொல்லை களில் வரகினது அரிகாலைப் பொருந்தியிருக்கும் காட்டெலிகளை வேட்டமாடுவர். எலியொன்றைக் கண்டதும் அவர்கள் ஆரவாரம் செய்வர். அவ்வோசையைக் கேட்டு அருகே மேயும் முயல்கள் அண்மையில் உள்ள அவர்களது குடிசையின் முற்றத்தில்

இருக்கும் மட்கலங்களின் இடையே துள்ளிப்பாய்ந்து செல்லும். அதனால் மட்கலங்கள் உருண்டு உடைந்து விடும் என்பதாக ஆவூர்கிழார் குறிப்பிடுகின்றார். இப்பாடல் முல்லைநிலத்தின் வாழ் வியலின் இடம்பெறும் ஒவ்வொரு சிறுநிகழ்வினையும் காட்சிப் படுத்துகின்றது. வரகு, காட்டெலி, முயல், மட்கலங்கள் போன்றவை முல்லைநிலத்தின் தன்மையை விளக்கும் சான்றுகள்.

"வெருக்கு விடை அன்ன வெகுள்நோக்குக் கயந்தலை,
புள்ஊன் தின்ற புலவுநாறு கயவாய்,
வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை உடையின் கரையுடை வால்முள்
ஊக நுண்கோல் செறித்த அமபின்,
வலாஅர் வல்வில் குலாவரக் கோலி,
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலம் தழீஇய அம்குடிச் சீறூர்" (புறம்.324)

எனும் மற்றொரு பாடலில் வேட்டுவர்கள் காட்டுப்பூனையின் ஆணைப்போல் வெருண்ட பார்வையும் மெல்லிய தலையும் உடையவர்கள் பறவையின் ஊனைத் தின்பதால் புலால் நாற்றம் கமழும் மெல்லிய வெளுத்த வாயையுடையவர்கள் அவர்களின் பிள்ளைகள் ஒருவரையொருவர் விரும்பி நட்புக் கொண்டு உறையும் பண்பினை உடையவர்கள். அச்சிறுவர்கள் சிறிய இலைகளையுடைய ஊகம் புல்லில் செருகிய அம்பை வளாரால் செய்யப்பட்ட வில்லில் வைத்து வளைத்துப் பருத்தியாகிய வேலியடியில் உறையும் காட்டெலிகளை வீழ்த்துவதற்குக் குறி பார்த்து எய்து விளையாடுவர். இத்தகைய புன்செய் சூழ்ந்துள்ள அழகிய குடிகள் வாழும் சிறூர் என்று ஆலத்தூர் கிழார் கூறுகின்றார்.

விற்பயிற்சி, வில்லாற்றல் என்பது மற்ற சமூகத்தவரைப் போலவும், அரசமரபினரைப் போலவும் ஒருபொழுதுபோக்குப் பயிற்சி அன்று. எயினர்களின் உணவுத்தேவை மற்றும் உயிர்வாழ்தலுக்கான தேவையாக விற்பயிற்சி அமைகின்றது. முல்லை நிலத்து எயினர்கள் விற்பயிற்சி இல்லாவிடின் அவர்களது உணவுத்தேவை மற்றும் பாதுகாப்பைப் பூர்த்தி செய்து கொள்ள இயலாது. எனவே வில்லும் அம்பும் முல்லைநிலத்து எயினர்களின் வாழ்வியலோடு இணைந்து புழங்கு பொருட்களாக உள்ளன.

புராதன சமுதாயத்தின் எச்சமாகவும் இனக்குழுமுறையின் அம்சமாகவும் இதனை அறிந்துகொள்ள முடியும். குறிஞ்சி நிலத்தில் வேலன் வெறியாட்டு நிகழும் காலத்தில் வேலன் கையில் கொண்டு வரும் வேலானது, புராதன சமுதாயத்தில் உற்பத்திக் கருவியாக உழுகருவியாகப் பயன்படுத்தப்பட்ட ஒன்று என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

உணவு

இனவரைவியல் கூறுகளில் ஓர் இனக்குழு மக்களின் உணவு என்பது அவர்களின் வாழும்நிலத்தோடு எவ்வாறு தொடர்பு பட்டுள்ளது என்பதும் அவ்வுணவைப் பெற அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் உற்பத்தி மற்றும் வேட்டை முறை களும் ஆராயப்பட வேண்டியவை. கானவர் தினை பயிரிட்ட செய்தி முன்னர் கூறப்பட்டது. அவர்கள் உணவுக்காக மட்டுமல்லாது கானக்கோழி, இதற்பறவை, புறா முதலிய பறவைகளைப் பிடித்துச் சமைப்பதற்கும் தினையைப் பயன்படுத்தினர். எயினப் பெண்கள் அப்பறவைகளைப் பிடிப்பதற்காகத் தம் குடிசைகளின் முற்றத்தில் மான் தோலை விரித்து அதில் தினையைப் பரப்பி வைப்பர். அப்பறவைகள் அதில் வந்து மேயுங்கால் எயிற்றியர் அவற்றைப் பிடித்துக் கொன்று சமைப்பர். இதனை,

> "மான்அதட் பெய்த உணங்குதினை வல்சி
> கானக் கோழியோடுஇதல் கவர்ந்துஉண்டென,
> ஆரநெருப்பின் ஆரல் நாற,
> தடிவு ஆரந்திட்டமுழு வள்ளூரம்
> இரும்போர் ஒக்கலொடு ஒருங்கு இனிது அருந்தி,
> தங்கினை சென்மோ, பாண!" (புறம்.320)

என்னும் பாடலில் பாணனே மான் தோலில் பரப்பி உலரவைத்த தினையரிசியைக் காட்டுக்கோழியும் இதற் என்ற பறவைகளும் கவர்ந்துண்டு அகப்பட்டனவாக, சந்தனக் கட்டையாலாகிய நெருப் பில் சுட்டுத்துண்டு துண்டாக அறுத்த நிறைந்த இறைச்சியை ஆரல் மீனின் நாற்றமும் உடன்கமழ கரிய பெரிய சுற்றத்தோடே கூடியிருந்து இனிது உண்டு அவ்விடத்தே தங்கிச் செல்வாயாக என்றும்,

> "படலை முன்றில் சிறுதினை உணங்கல்
> புறவும் இதலும் அறவும் உண்கெனப்

பெய்தற்கு எல்லின்று பொழுதே" (புறம்.319)

என்னும் பாடலில், படல் கட்டிய முற்றத்தில் சிறிய தினையாகிய உலர்ந்ததனைப் புறாக்களும் இதற்பறவைகளும் முற்றவும் உண்க என்று தெளித்த அவற்றைப் பிடித்துச் சமைப்பதற்கு ஞாயிறு மறைந்து இரவாயிற்று என்னும் கூற்றிலிருந்து தினையையும், காட்டுக்கோழியையும், புறாவையும், கானவர்கள் சமைத்து உணவாகக் கொண்டனர் என்பது புலப்படுகின்றது. இதுமட்டு மல்லாமல் உடும்பு, முயல், பன்றி, முள்ளம்பன்றி, மான் போன்ற வற்றையும் வேட்டையாடி உண்டுள்ளனர்.

உதாரணமாக உடும்பு வேட்டையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கால்கோழி, அரைஆடு, முக்கால் காடை, முழு உடும்பு' என்னும் சொலவடைக்கேற்ப, எயினர் வேட்டையாடிய விலங்கு களில் உடும்பும் ஒன்றாகும். உடும்புகளை எயினர் விரும்பி வேட்டையாடினர். 'உடும்பின் தசை சக்திமிக்கது என்று மக்கள் கருதுகின்றனர். அதன் தசை உண்பாரது உடலில் முழுமையாகச் சேரும் என்பது மக்களின் நீண்ட கால நம்பிக்கை ஆகும். ஊருக்கு அண்மையில் இருந்த மடுக்கரையில் இருந்து உடும்புகளை எயினச் சிறார் பிடித்து வந்த செய்தியைப் புறநானூறு எடுத்துக் காட்டுகின்றது. அஃது

"ஊர் அருமிளையதுவேமனைவியும்,
வேட்டச் சிறாஅர் சேண்புலம் படராது,
படப்பைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை,
யாணர் நல்லவை பாணரொடு ஓராங்கு
வருவிருந்துஅயரும் விருப்பினள்" (புறம்.326)

கடத்தற்குரிய காவற்காடு சூழ்ந்த இடத்தின்கண் உள்ள ஊரில் மனைக்கிழத்தி, வேட்டுவச் சிறுவர்கள் நெடுந்தொலைவு செல்லாமல் மடுக்கரையில் பிடித்துக்கொண்டு வந்த குறுகிய காலை யுடைய உடும்பினது விழுக்காகிய தசையைப் பெய்து சமைத்த தயிரோடு கூடிய கூழையும் புதிதாக வந்த வேறு நல்ல உணவு களையும் பாணருக்கும் அவரோடு வந்த ஏனை விருந்தினருக்கு ஒருசேரக் கொடுத்து உண்பிக்கும் இயல்பினள் என்பதாக உடும்பு வேட்டையும் அதைச் சமைத்துப் பரிமாறிய விதமும் விளக்கப்

பட்டுள்ளது. தம் நிலச் சூழலுக்கு ஏற்றதான அங்கு கிடைக்கக்கூடிய உணவுகளையே மக்கள் உட்கொண்டனர் என்பது இயல்பான ஒன்றாக இருந்தது. உடும்பு சமைத்த செய்தியை பெரும் பாணாற்றுப்படையும்,

"களர் வளரீந்தின் காழ் கண்டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலிதந்த மனவுச் சூழ் உடும்பின்
வரைகால் யாத்தது வயின்தொறும் பெறுகுவீர்"

(பெரும்பாணாற்றுப்படை. 130–133)

என்பதாகக் குறிப்பிடுகிறது. களர்நிலத்தே வளர்ந்த ஈந்தினிது விதை போன்ற மேட்டுநிலத்தே விளைந்த நெல்லினது சிவந்த அவிழாகிய சோற்றை, நாய்கடித்துக் கொண்டுவந்த அக்குமணி போன்ற முட்டைகளையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்தனை மனைதோறும் பெறுகுவீர் என உடும்பின் தசையைச் சமைத்து விருப்புடன் வழங்கி உபசரித்த செய்தியை சங்க இலக்கியங்கள் எடுத்துக்கூறுகின்றன.

உடும்பைப் போலவே முயலையும் எயினர் மிகுதியாக வேட்டையாடி உண்டனர். வேட்டுவர் குடிசைகளில் முயற்கறி எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் உண்ணக் கிடைத்தது. இதனைப் புறநானூறு பின்வருமாறு கூறியுள்ளது. அவை,

"படலை முன்றில் சிறுதினைஉணங்கல்
புறவும் இதலும் அறவும் உண்கெனப்
பெய்தற்கு எல்லின்று பொழுதே; அதனான்
முயல் சுட்ட ஆயினும் தருகுவோம், புகுதந்து
ஈங்கு இருந்தீமோ, முதுவாய்ப்பாண" (புறம்.319)

என்பதாகக் குறிப்பிடுகிறது. "பாணனே சிறிய தினையரிசியை முற்றத்தில் தெளித்து அதனை உண்ண வரும் புறா முதலிய பறவைகளைப் பிடித்துச் சமைத்து உங்களுக்கு வழங்குவதற்குக் காலமின்மையின் எம்மிடம் உள்ள பழையதாகிய சுட்ட முயற்கறியே அதனை உங்களுக்கு உண்ணத் தருவோம் என்று பாணனை உபசரித்து முயற்கறியை உணவாக வழங்கிய திறம் பேசப்படுகின்றது. இப்பாடலும் முயற்வேட்டை மட்டுமல்லாது எயினர் குடியின்

விருந்தோம்பல் பண்பும் பேசப்படுகின்றது. விருந்தினர்களுக்கு தம் நிலத்தின் விளைபொருளை அன்பளிப்பாகக் கொடுப்பது அனைத்து சமூகங்களிலும் தொன்றுதொட்டு வரக்கூடிய மரபு ஆகும். இம்மரபை தொல்குடியான எயினக்குடியினரும் பின்பற்றி யுள்ளனர்.

வேட்டை முறை

எயினர்கள் தம் வேட்டை முறைக்கு வில் அம்புகளைக் கருவியாகப் பயன்படுத்தியதை முன்னர் கண்டோம். அது தவிர்த்து சில வேட்டை நுணுக்கங்களையும் கைக்கொண்டனர். உதாரண மாக மான்வேட்டை பற்றிக் குறிப்பிடும்பொழுது, எயினரது குடிசையின் முற்றத்தில் பலாமரம் அல்லது விளாமரம் நிற்கும். அதில் பார்வை மான் கட்டப்பட்டிருக்கும். பார்வை மான் கட்டிய கயிறு உராய்ந்தால் அம்மரத்தின் அடி தேய்ந்திருந்தது. இதனை,

"பார்வை யாத்த பரைதாழ் விளவு"

என்றும்,

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பி,
பந்தர் வேண்டாப் பலர்தூங்குநீழல்,
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தென,
பார்வை மடப்பினை தழீஇ" (புறம்.320)

என்றும் குறிப்பிடப்படுகிறது. பார்வை மான் என்பது பிற மான் களைப் பிடிப்பதற்காகப் பயிற்சி தந்து கட்டப்பட்ட பெண்மான். இதனை எயினர் தம் குடிசையின் முற்றத்தில் இருந்த பலாமரம் அல்லது விளாமரத்தின் அடியில் கட்டி வைத்திருந்தனர். ஆண் மான்கள் புணர்ச்சிவேட்கை கொண்டு மேய்தல் தொழிலைக் கை விட்டு அதனோடு கூடி விளையாடி அயர அங்கு வரும் கலையும் பிணையும் புணர்நிலைக் கண் விளையாட்டயர்தலைக் காணும் எயினர் இரக்கமின்றிக் கலையை எளிதில் வீழ்த்துவர். அதற்காகப் பயிற்சி தந்து கட்டப்பட்ட பெண்மானே பார்வைமான் எனப்படும். இப்பாடல் எயினர் சமூகத்தின் வேட்டை நுணுக்கங்களை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.

எயினரின் விருந்தோம்பலும், பாதீடும்

வேட்டைச் சமூகத்தவரான எயினர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள்

எடுத்துக்கூறுகின்றன. விருந்தோம்பல் இம்மக்களின் தலையாய பண்பாக விளங்கியது. அதுமட்டுல்லாது தம் இல்லம் நாடி வந்த பாணர் முதலிய விருந்தினரை இனிய முகத்தினராய் இன்சொல் லினராய் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தனர். பசி நீங்க உண வளித்துப் போற்றினர். தம்மிடம் இருந்தது எதுவாயினும் எந்நேர மாயினும் அதனை விருந்தினர்க்குப் பகிர்ந்தளித்துப் பசிபோக்கினர். பகிர்ந்துண்ணும் பண்பை இயல்பாகவே பெற்றிருந்த எயினகுடிப் பெண்கள் விருந்தோம்பலில் தலைசிறந்து விளங்கினர் என்பதில் வியப்பேதுமில்லை. எயினர் குடியினரின் இச்சீரிய பண்புக்கு அவர்கள் வாழ்ந்த சமூக அமைப்பே காரணம் ஆகும். அவர்கள் ஆதி பொதுவுடைமை வகைப்பட்ட கண சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

வேலின் கூரிய முனை போன்ற ஈந்தின் இலைகளால் வேயப் பட்டதும் முள்ளம்பன்றியின் முதுகுபோல் காணப்பட்டதும் ஆன குடிசைகளில் எயினர் வாழ்ந்தனர். அக்குடிசையின் உள்ளே எயிற்றி ஒருத்தி படுத்திருந்தாள். அவள் அண்மையில்தான் குழந்தை ஒன்றைப் பெற்றிருந்தாள். தாயும் சேயும் மான்தோலாகிய படுக்கை யில் முடங்கிப் படுத்திருந்தனர். அக்குடிசையைச் சேர்ந்த பிற பெண்கள் உணவு தேடி வெளியே சென்றிருந்தனர். அவர்கள் கையில் வலிய கோல் ஒன்று இருந்தது. வயிரம் பாய்ந்த கோல். அதன் ஒரு முனையில் உளி ஒன்று செருகப்பட்டிருந்தது. மறு முனையில் பூண் கட்டப்பட்டிருந்தது. அக்கோல் கடப்பாறைபோல் தோற்றமளித்தது.

கரம்பை நிலமாகிய காட்டில் மிகவிளைந்து உதிர்ந்து கிடந்த புல்லரிசியை எறும்புகள் இழுத்துச்சென்று சேமித்து வைத் திருந்தன. அவ்வாறு சேமித்து வைத்த இடங்களைத் தேடி அப்பெண்கள் சென்றனர். அவர்கள் தம் கையில் வைத்திருந்த கடப்பாறையால் அவ்விடங்களில் கட்டிகள் கீழ்மேலாகுமாறு குத்தியதால் எறும்புகள் சேமித்து வைத்த புல்லரிசியைப் பெற்றனர். இவ்வாறு பெற்ற புல்லரிசியினை விருந்தினர்களுக்குப் பரிமாறினர் என்பதை,

"நீருட்பட்ட மாரிப் பேருறை
மொக்குளன்ன பொகுட்டு விழிக்கண்ண,

கரும்பிடர்த் தலைய, பெருஞ்செவிக் குறுமுயல்
தொள்ளை மன்றத் தாங்கட் படரின்
உண்கென உணரா உயவிற்றாயினும்
தங்கினிர் சென்மோ, புலவீர்! நன்றும்,
சென்றதற் கொண்டு, மனையோள் விரும்பி,
வரகுந்தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மக்கள்உணக் கொளத் தீர்ந்தென;
குறித்து மாறு எதிர்ப்பைப் பெறா அமையின்,
குரல்உணங்க விதைத் தினையுரல் வாய்ப்பெய்து,
சிறிது புறப்பட்டன் றோஇலளே" (புறம்.333)

ஊரின் கண் உள்ளதும் அரிய பிடர் பொருந்திய தலையும் நீண்ட காலும் உடைய குறுமுயல் ஊருக்குள் இருக்கும் குறுகிய புதர்களில் துள்ளி விளையாடும் வளைகள் பொருந்தியதும் ஆன மன்றத்துக்குச் சென்றால் அங்கே உங்களை உண்ணுங்கள் என்று குறிப்பறிந்து கூறுபவர்கள் எவரும் இல்லாத வருத்தம் உடைய தாயினும் அங்கே பெரிதும் தங்கிச் செல்வீராக சென்றதனால் மனைத் தலைவி உங்களுக்கு உணவளிக்க விரும்பி வரகும் தினை யுமாக, வீட்டில் இருந்தவற்றையெல்லாம் இரவலர் உண்டதனாலும் தானமாகக் கொண்டதாலும் தீர்ந்து போனதால், கைமாற்றுக் கடனாகவும் பெறமுடியாத நிலையில் கதிரிடத்தே முற்றி உலரவிட்ட விதைத் தினையை உரலில் இட்டுக் குற்றிச் சமைத்து உங்களை உண்ணச்செய்வாள். தனது இல்லாமையைச் சொல்லி நீங்கள் பசியோடு வெறுங்கையுடன் செல்லுமாறு விடமாட்டாள் என்பதாகக் கூறப்படுகிறது. இப்பாடலில் கணசமூகத்திற்கே உரிய பகுத் துண்ணும் பண்பு வெளிப்படுகின்றது.

இப்பண்பே பாதீடு என்னும் சொல்லால் குறிக்கப்படு கின்றது. வெட்சிப்போரில் கவர்ந்த ஆநிரைகளையும் கூட கண சமூக மாந்தர் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர்.

"காலைப்
புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி,
கையின் சுட்டிப் பையென எண்ணி,
சிலையின் மாற்றியோனே; அவைதாம்

மிகப் பலவாயினும், என்ஆம் எனைத்தும்
வெஃகோள் தோன்றாக் குழிசியொடு,
நாள் உறை மத்தொலி கேளாதோனே" (புறம்:237)

எனும் புறப்பாடலடிகள் வெட்சிப்போரில் கவர்ந்து வந்த ஆநிரைகளைக் கணசமூக மாந்தர் பங்கிட்டுக் கொண்ட செய்தியை எடுத்துக்காட்டுகின்றன. உலகம் முழுவதிலும் கணசமூகத்தில் தனியாருக்கு வேட்டைப் பொருள், மீன், உணவு முதலியவற்றுள் தனியுரிமை இருக்கவில்லை. அவன் வாழ்ந்த சமத்துவ சமூகம்தான் பெறும் எதையும் குழுவினருடன் பங்கிட்டுக் கொள்ளும்படி, இயல்பான உள்ளுணர்வாகவே அவனை உந்தியது என பழங்குடியினரைப் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முடிவுரை

புறநானூற்றை இனவரைவியல் கோட்பாட்டில் உட்படுத்தும் போது மேலே கூறப்பட்ட எயினர் மற்றும் கானவர் சமூகத்தின் வேட்டையாற்றல் உணவுமுறை, உற்பத்திமுறை, விருந்தோம்பல் பண்பு முதலியவற்றுடன் உண்டாட்டு, பாதீடு, நடுகல் வழிபாடு போன்ற பிற இனவரைவியல் கூறுகளும் நமக்குக் காணக்கிடைக்கின்றன. அவற்றின் விரிவு இன்னும் ஆழமான பொருளைத் தேடித்தரும். புறநானூற்றில் இக்குடிகளைத் தவிர, இடையர், பரதவர், மருதநிலத்தைச் சேர்ந்த சேர்ப்பன் முதலான சமுதாயத்தினரின் வாழ்வும் அவர்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றனவும் பேசப்பட்டுள்ளன. அதற்கு எதிரிடையாக மூவேந்தர்களின் அரசமைப்பு, போர்முறைகள் பற்றியும் பேசப்பட்டுள்ளன. மொழியால் ஒன்றுபட்ட இனக்குழுவில் அவர்கள் வாழ்ந்த இடம், சூழல், பழக்கவழக்கங்கள், உணவு தேடும் முறை, உற்பத்தி முறை போன்றவற்றால் தனித்தனி இனக் குழுக்களாகவே மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வாறு ஒவ்வொரு இனக்குழுவின் இனவரைவியல் கூறுகளை ஆராய்வதின் வழி அக்குழுவின் பழமை மற்றும் தனித்தன்மைகளை அறிந்துகொள்ள முடியும் என்பது திண்ணம்.

பாலைத்திணையில் பொழுதுகள்

இல. மங்கலட்சுமி
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியற் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

முன்னுரை

மனிதனின் வாழிடமும் சூழலும் தான் அவனின் வாழ்வியலை உறுதி செய்யும் காரணிகளாக விளங்குகின்றன. அந்த வகையில் சங்ககால இலக்கியங்கள் ஐந்திணைக் கோட்பாடுகளாய்ப் பகுக்கப் பட்டு நிலம் பொழுது எனும் முதற்பொருள் வழி மனித வாழ்வியலைப் புலப்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது. இவற்றுள் தொல்காப்பியம் கூறும் பொழுது சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்களில் இடம்பெற்று வரும் நிலை பற்றி விவரிப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியர் கூறும் இலக்கணம்

முதல் என்று சொல்லப்படுவது நிலம், பொழுது எனும் இரண்டின் இயல்பைக் கூறுவது என்பர். இதனைத் தொல்காப்பியர் கூறும்,

"முதலெனப்படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந்தோரே"

(தொல்.பொருள்.அகத்.4)

எனும் சூத்திரத்தான் அறியலாம். இதற்கு நச்சினார்க்கினியர், "முதலென்று சிறப்பித்துக் கூறப்படுவது நிலனும் பொழுதும் என்னும் இரண்டினது இயற்கை நிலனும் இயற்கைப் பொழுதுமென்று கூறுப, இடமுங் காலமும் இயல்பாக உணர்ந்த ஆசிரியர் என்றவாறு" (தொல். பொருள்.நச்சர்.உரை.ப.15) எனத் தம் உரையில் குறிப்பிடு கிறார். மனித வாழ்வைச் செயல்படுத்தும் இடமாகிய நிலமும், செயல் படுத்தும் காலமாகிய பொழுதும் முதன்மையானவை எனக் கருதிய தால் இவற்றை முதற்பொருள் எனக் குறிப்பதனை அறிய முடிகிறது.

பொழுதுகள்

தொல்காப்பியர் பொழுதினை பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படுத்திக் கூறுவர். ஓர் ஆண்டின் 6 பெரும் பகுப்பை பெரும்பொழுது எனவும் ஓர் நாளின் 6 வகைப் பகுப்பைச் சிறு பொழுது எனவும் கொள்வர். பெரும் பொழுதினைக் கார், குளிர், இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி எனக் கூறுவர். இதனை, "கார் என்பது, மழை பெய்யும் காலம், அஃது ஆவணித் திங்களும் புரட்டாசித்திங்களும், கூதிர் என்பது குளிர்காலம், அஃது ஐப்பசித் திங்களும், கார்த்திகைத் திங்களும் முன்பனிக்காலம் என்பது மார்கழித் திங்களும் தைத்திங்களும், பின்பனியாவது மாசித் திங்களும் பங்குனித் திங்களும், இளவேனில் என்பது சித்திரையும் வைகாசியும் சேர்ந்த காலப்பகுதி, ஆனியும் ஆடியும் சேர்ந்த காலப் பகுதி முதுவேனிலாகும்" எனவும் காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை எனும் கூறுபாட்டை ஓர் நாளுக் குரியதாகக் கொண்டு "வைகறை என்பது இராப்பொழுதின் பிற்கூறு; விடியலாவது, பகற்பொழுதின் முற்கூறு, எற்பாடு, மாலை, யாமம், வைகறை எனும் கூறுபாட்டை ஓர் நாளுக்குரியதாகக் கொண்டு, வைகறை என்பது இராப்பொழுதின் பிற்கூறு; விடியலாவது, பகற் பொழுதின் முற்கூறு; எற்பாடு என்பது பகற்பொழுதின் பிற்கூறு; நண் பகலாவது பகற்பொழுதின் நடுக்கூறு; யாமம் என்பது இராப் பொழுதின் நடுக்கூறு; ஒவ்வொரு பகுதியும் பப்பத்து நாழிகை கொண்டவை" எனவும் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் கூறும் பாலைத்திணைக்குரிய பொழுது

தொல்காப்பியர் பாலைத்திணையைக் குறிக்க, 'நடுவனது திணை', 'நடுவு நிலைத் திணை' எனும் பொதுவான சொல்லைக் கையாள்கிறார். பாலைத்திணைக்குரிய பொழுதாகத் தொல் காப்பியர், சிறுபொழுதில் நண்பகலையும் பெரும்பொழுதில் வேனிலை யும் பின்பனியையும் குறிப்பிடுகிறார். பொழுது குறித்து தொல் காப்பியர் கூறுவது நிலத்தையும் அவ்விடத்து நிகழும் தொழிலை யும் அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகிறது. தொல் காப்பியர் பாலைத்திணைக்குரிய பொழுதை,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு

முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"

(தொல்.பொருள்.அகத்.11)

"பின்பனிதானு முரித்தென மொழிப"

(தொல்.பொருள். அகத்.12)

எனும் இரண்டு சூத்திரத்தின் மூலம் உணர்த்துகிறார்.

தொல்காப்பியர் கூறும் பாலைத்திணைக்குரிய சிறுபொழுது

தொல்காப்பியர் பாலைத்திணைக்கு உரிய சிறுபொழுதாக நண்பகலைக் குறிப்பிடுகிறார். அத்தகைய நண்பகற்பொழுது பாலைத்திணைப் பாடல்களில் பயின்று வருகின்றன.

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள 'உருப்பு அவிர் அமையம்' என்பதற்கு 'கானல் விளங்குகின்ற நண்பகற் பொழுதின் கண்' என உரையாசிரியர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். அகநானூற்றில் இடம்பெற்றுள்ள 'கனை சுடல் அமையம்' என்பதற்கு 'வெப்பமிக்க கதிர்களையுடைய பகற்பொழுதில்' (நண்பகல்) என விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும் ஐங்குறுநூற்றில் 'எல்லிடை' என்பது 'நண்பகல்' எனவும் நண்பகல் உணவிற்கு வரும் விருந்தினர் எனவும் நண்பகற் பொழுதைக் குறிக்கும் சொற்கள் இடம்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட சில பாடல்களில் மட்டுமே தொல் காப்பியர் பாலைத்திணைக்கு உரியதாகக் கூறும் நண்பகற்பொழுது அத்திணைப் பாடல்களில் பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

தொல்காப்பியம் கூறும் பாலைத்திணைக்குரிய பெரும்பொழுது

தொல்காப்பியர் பாலைத்திணைக்குரிய பெரும்பொழுதாக வேனிற்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் ஆகியன பயின்று வந்துள்ளன. இவை வேனிற்காலத்தின் தன்மையைக் குறிக்கும் சொற்களாக இடம்பெற்றுள்ளன.

'நின்றவேனில், என்றூழ், வேனில், இன்பவேனில் உருப்பு அவர் அமையம், கோடைத்திங்கள், முளிவயிர், காமர் வேனில், முகைதலை திறந்தவேனில், கடுதெறல்வேனில், கோடை, ஊன் இல் யானை உயங்கும் வேனில், குயில் குரல் கற்ற வேனில், பைது அறு காலை, யாணர்வேனில், இதழ்வேனில்' என்பன அமை கின்றன. இவ்வாறு வேனிற் காலத்தின் தன்மையைக் குறிக்கும் சொற்களை மாந்தர்களின் மன உணர்வுகளின் அடிப்படையில்

அமைக்கப்பட்டுள்ள பாங்கினை சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

இளவேனில் காலம்

தொல்காப்பியர் பாலைத்திணைக்குரிய பெரும்பொழுது எனக் கூறும் இளவேனிற்காலம் சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்களில் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளது. அவ்விள வேனிற்காலம் பெரும்பாலும் பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும் காட்சியைக் கூறுவதுடன் அக்காலத்துத் தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் தலைவியின் மன உணர்வை வெளிப்படுத்து வனவாய் அமைந்துள்ளது.

முற்றாவேனில், பூமலி காலை, வேனில், இன்னாது ஆகிய காலை, முதிரா வேனில், நறுந்தாது கொழுந்தும் பொழுது, திங்கள், பிரிவு அரும் காலை, அயிர்க்கேழ் நுண்ணுறனுடங்கும் பொழுது, அணிமிகு கொழுமுகை உடையும் பொழுது, கொய்யும் பொழுது, காமர்பொழுது, செங்கன் இருங்குயில் அறையும் பொழுது, பொரிபூம் புன்கின் முறிதிமிர் பொழுது, மணங்கமழ் தண்பொழின் மலரும் பொழுது, இளந்தளிர் ஈனும் பொழுது, தேம்படு இளவியவர் தெளிக்கும் பொழுது, தண்பதவேனில், நீள்சினை உறையும் பருவம், பெரும்பதவேனில், இகழுநர் இகழா இளநாள் அமையும். அற்சிரம் நீங்கிய அரும்பதவேனில், இன் இளவேனிலும், பனி நீங்கு வழிநாள், சிதர் சிதர்ந்து உழுந்த செவ்விவேனில், வருவேம் என்ற பருவம், செவ்விவேனில், இளவேனல், அறல்சாய் பொழுது, நடுக்கம் செய்பொழுது, இடைபோழும் போழுது, பேதுறூஉம் பொழுது, இறைகொள எதிரிய வேனில், குயில் ஆலும் பொழுது, தேன் ஆர்க்கும் பொழுது, பெறலரும் பொழுது, கலக்குறூஉம் பொழுது, தாதுஅவிழ் வேனில், போன்ற பல நிலைகளில் இளவேனிற் காலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

முதுவேனிற் காலம்

சங்க இலக்கியப் பாலைக் கலியில் வேனில், வெங்கோடை எனும் இருசொற்கள் முதுவேனிற் காலத்தைக் குறித்து வந்தமையை அப்பாடல்களுக்கு அமைந்த உரையின் வழி அறிய முடிகிறது. மேலும் கோடையின் வெம்மையைக் குறிக்கும் 'கோடை'

எனும் சொல் அகநானூற்றிலும் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

பின்பனிக்காலம்

தொல்காப்பியர் பின்பனிக் காலத்தைப் பாலைத் திணைக்குரிய பெரும்பொழுதாகக் குறிப்பிடுகிறார். அக்காலம் குறித்த சொற்கள் பாலைத்திணைப்பாடல்களில் காணப்படுகின்றன.

பின்பனி அமையம், வைகுபனி, மையல் அற்சிரம், வாடைப் பெரும்பனி, பின்பனி, தைஇ நின்ற தண்பெயல் கடைநாள் என பின்பனிக்காலத்தையும் அதன் தன்மையையும் உணர்த்தும் சொற்கள் பாடல்களில் பயின்று வந்துள்ளன.

முடிவுரை

இளவேனிற்காலம் முதுவேனிற்காலம் முதலான பருவங்களின் காட்சிகள் மாந்தர்களின் உணர்வை வெளிப்படுத்தும் வாயில்களாக அமைந்துள்ளன. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, தோழி இவர்களின் வருத்த நிலையை வெளிப்படுத்த இளவேனிற் காலத்தின் நிகழ்வுகளும் சில இடங்களில் தலைவன் பிரிந்து சென்ற வழியின் கொடுமையைத் தோழி கூறுகின்ற நிலையில் வேனிற் காலத்தின் காட்சிகளும் பின்னணியில் அமைந்துள்ளன. பாலைத் திணைக்கு உரியதாகத் தொல்காப்பயிர் கூறும் இளவேனில், முதுவேனில், பின்பனி ஆகிய பெரும்பொழுதுகள் பெரும்பான்மையும் நண்பகல் எனும் சிறுபொழுது சிலவிடங்களும் பாலைத் திணைப் பாடல்களில் வந்துள்ளதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

பாவேந்தர் பிள்ளைத்தமிழ்

முனைவர் நெல்லை. ந.சொக்கலிங்கம்
'பொதிகை', நாகமலைப் புதுக்கோட்டை,
மதுரை - 19.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சிக்கு ஊற்றாய் விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன். 'கெடல் எங்கே தமிழின் நலன் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி' செய்யும் வண்ணம் தமிழ்க் காப்புணர்ச்சியைப் பேணிக்காத்த பெருந்தகை ஆவார். அவரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு புலவர் புலமைப்பித்தன் 'பாவேந்தர் பிள்ளைத்தமிழ்' பாடிச் சிறப்பித்துள்ளார். இந்நூல் எடுத்தியம்பும் இலக்கியத் திறத்தையும் தரத்தையும் துலக்கிக் காட்டும் வகையில் அமைவதே இக்கட்டுரை.

நூலமைதி

'பிள்ளைத்தமிழ்' என்ற சிற்றிலக்கியம் ஆண்பாற்பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகை; பத்துப் பருவங்களாகக் கொண்டு பாடப்பெறுவது இவ்விலக்கியம். முதல் ஏழு பருவங்களும் இருவகைப்பிள்ளைத் தமிழுக்கும் பொதுவாகும். 8, 9, 10 ஆகிய இறுதி மூன்று பருவங்களும் இவற்றுள் வேறுபடும்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் பாடாண்திணையை விளக்குமிடத்துக்

"குழவி மருங்கினும் கிழவ தாகும்" (தொல்.புறத்.24)

என்று கூறியுள்ளார். இவ்வித்துப் பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் என்னும் சிற்றில்க்கியமாக முழு வளர்ச்சி பெற்றது. ஆழ்வார் கள் திருமாலைக் குழந்தையாகப் பாவித்துச் சில பருவங்கள் பாடி யுள்ளனர். சேக்கிழார் கண்ணப்பநாயனார் புராணத்துள் சில பருவங்களையும் போற்றிப் பாடி இப்பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை செய்துள்ளனர். ஒட்டக்கூத்தர் பாடியுள்ள இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழே காலத்தால் முற்பட்டது என்பர் ஆய்வாளர். இதன் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

"காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்" (பன்னிரு.102)

என்பது பன்னிருபாட்டியல் நூற்பாவாகும். பாட்டுடைத் தலைவனைப் (கடவுளோ/அரசனோ/ தலைவனோ) பிள்ளைப் பருவத்தினனாக எண்ணிப் பாடுவதாக இந்நூல் அமையும்.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பெயர் பாட்டுடைத்தலைவரின் பெயரிலோ அவர்தம் ஊர்ப்பெயரிலோ அமையும். அவ்வகையில் புலவர் புலமைப்பித்தன் 'பாவேந்தர் பிள்ளைத்தமிழ்' நூலைப் பாடியுள்ளார். இப்பெயர் பாரதிதாசனுக்கு வழங்கப்பெற்ற சிறப்புப் பட்டமாகும். 'பாவேந்தர்' என்று கூறப்பெறும் - குறிக்கப்பெறும் சிறப்புப் பாரதிதாசன் ஒருவரையே குறிக்கும்.

நூலாசிரியர்

புலவர் புலமைப்பித்தன் பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தமிழ்க்கல்லூரியில் புலவர் படிப்பை முடித்தவர் இவர் தமிழகச் சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். இவர் பல திரைப் படங்களுக்குப் பாடல் எழுதிய திரைப்பாடலாசிரியரும் ஆவார். "பாவேந்தர் பிள்ளைத்தமிழ்" நூல் புலவர் திரு.மருதவாணன் அவர்களின் இடைவிடாத வற்புறுத்தலால் பிறந்ததே; இந்தப் பிள்ளைத் தமிழின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்கி என்னை எழுத வைத்தவன் குமரகுருபரன் தான்." (பiii) என்னும் புலமைப்பித்தனுடைய வாக்குமூலம் இவண் கருத்தில் கொள்வதற்குரியதாகும்.

பத்துப் பருவங்களாக வளரும் 'பாவேந்தர் பிள்ளைத்தமிழ்' முன்னைய இலக்கண மரபிற்கு ஏற்ப அமைந்துள்ளது. ஆனால், இந்நூலின் காப்புப்பருவத்திற்கு முன்னதாக முதற்பாடலாக அமைவது அண்ணாவை அஞ்சலி செய்வதாகவும் தாம் பாடப்போகும் நூலை,

"கான்பழுத் ததுவெனவொர் கவிபழுத் திடுமினிய
கவிவேந்து சுப்பு ரத்னக்
க்னகமத னைப்பாடும் கவிதைமத லைப்பிள்ளைக்
கவிதைவள மதுதழை யவே"
(பாவேந்.பிள்ளை.1)

என்று மகுடம் சூட்டிப்பாடுகின்றார். தம்மை இப்புலவர் 'கவிதை மதலை' என அவையடக்கம் கூறித் தொடங்குகிறார். இந்நூல் 101 ஆசிரிய விருத்தப்பாக்களில் இந்நூல் அமைகிறது.

பாவேந்தரின் தாக்கமும் பாநயமும்

பாவேந்தரிடம் தணியாத பற்றுக்கொண்டவர் புலவர் புலமைப் பித்தன். பாரதிதாசனுடைய பாடல் அடிகளையும் கருத்துகளையும் ஆங்காங்கே உள்வாங்கிக் கொண்டுள்ளார் பிள்ளைத் தமிழாசிரியர் என்பதனைச் சில சான்றுகள் வழிக்காண்போம்:

"வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா ?
மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா ?"

(பாரதிதாசன் கவிதை, முதல் ப.1172)

என்பது பாவேந்தரின் படைச்செருக்கோடும் பளிச்சிட்டு வெளி வந்த பாடல் அடிகள். இவ்வடிகளின் தாக்கம் இதோ:

"வலியோர்கள் சிலராகி எளியோர்கள் தமை இங்கு
வதைக்கின்ற கொடுமை மாள
மகராசர் உலகாளும் நிலைஎன்னும் நிலைஎன்ற
நினைவா எனும்வி னாவைப்
பொலிவான குடியாட்சி பூத்தல்ரும் நாள்வரப்
போட்டாய்!" (பாவேந்.பிள்.ப.35)

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பறைசாற்றியவர் பாவேந்தர். அவர் தமிழுக்குக் கேடு வருமானால் அதனைத் தகர்த் தெறியத் தயங்காத உள்ள உறுதியும் உரமும் கொண்டு எக்காளம் இட்டவர்.

"மாங்குயில் கூவிடு மலர்ச்சோலை யாகும்எமை
மாட்டுஞ் சிறைச்சாலைகள்
மாசற்ற செந்தமிழ் மதிக்கொரு களங்கமெனில்
வாழ்தலினும் வீழ்தல் நன்று
ஓங்குகுரல் நீயெடுத்துறுமியது.........." (பாவேந்தர் பிள்.ப.37)

என்று புலமைப்பித்தன் பாடியுள்ள சப்பாணிப்பருவப் பாடலில் பாவேந்தரின் பன்மணித்திரள் (ப.86) பாடலடிகளின் பதிவைக் காண முடிகின்றது. சப்பாணிப்பருவப் பாடல்களின் இறுதியில் மகுடமாக வரும் அடியில் கூடப் புலமைப்பித்தன்,

"தமிழுக்கு மமுதென்று பேரென்று கொட்டுமொரு
சப்பாணி கொட்டி யருளே"

எனப்பாடுவார்; சப்பாணிப்பருவத்தின் ஆறு பாடல்களில் பாவேந்தரின் பாடலடி பதிந்திருப்பது கண்கூடு.

பாரதிதாசனின் "புரட்சிக்கவி"யில் வரும் கவிஞன் உதாரன் வெண்ணிலவைப் பார்த்து நயந்தோன்றப் பாடும் "நீலவான் ஆடைக் *குள் உடல் மறைத்து... நிலாவென்று காட்டுகின்றாய்...*" என்ற பாடல் தமிழிலக்கிய வானில் எல்லாரும் அறிந்த பாடலாகும். இப்பாடலை உள்வாங்கிக் கொண்ட புலவர் புலமைப்பித்தன் அம்புலிப் பருவத்தில்,

"நீலமணி வானமெனும் நெய்யாத துகில்கொண்டு
நினதுடல் மறைத்தவாறு
நிறைவான நிலவென்று மறையாது நின்முகம்
நேர்வந்து காட்டுகின்றாய்!
கோலமுழு துங்காட்டி நீவரவு தந்திடில்
குறையாத காத லென்னும்
கொள்ளையினில் இவ்வுலகு சாமோ வெனக்கேட்ட
கொற்றவன் இவன்பாட் டினில்"(பாவேந்.பிள்.ப.65)

என்னும் பாடல்வழி வெளிப்படுத்தக் காண்கின்றோம்.

பாவேந்தரின் பாடல்களை மட்டுமல்லாமல் பிற இலக்கியங் களையும், இலக்கியத் தொடர்களையும் புலமைப்பித்தன் எடுத் தாண்டு பிள்ளைத்தமிழை ஞாலமளந்த தமிழாக்கி விடுகின்றார். உலகளாவிய திருக்குறளைப் பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்கிறார். இப்பிள்ளைத் தமிழாசிரியரோ திருக்குறளை,

"பாலவை மூன்றில் ஞாலமளந்து
பரந்து கிடந்தமறை" (பாவேந்.பிள்.ப.89)

என்று போற்றிப்புகழ்கின்றார். புலவர் புலமைப்பித்தன், திருக்குறட் பாக்களை/குறளடிகளைத் தம்முடைய பிள்ளைத் தமிழில் ஆங் காங்கே ஏற்றிப் போற்றியுள்ளமைக்கு ஓரிரு சான்றுகள் காண்போம்:

காப்புப்பருவத்தில்" 'மழை'யைக் காத்தருளும் வண்ணம் வேண்டும்போது,

"துப்பார்க் கெனுங்குறளில் தூயதிரு வள்ளுவன்
துகளற வெடுத்து ரைத்த
துரிசிலாக் கிளவி..." (மேலது, ப.9)

எனக் கூறுவது இவண் எண்ணத்தகும்.

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று" (குறள்.1058)

என்னும் குறள் இரவு அதிகாரத்தில் வருவது. இக்குறளின் இரண்டாம் அடியைப் புலமைப்பித்தன்,

"மரப்பாவை சென்றுவந் தற்றெனக் காட்டவுயர்
மலைசூழ்ந்த சேரநாடு..." (பாவேந்.பிள்.ப.34)

எனவரும் அடியில் எடுத்தாண்டுள்ளமை அறியத்தகும்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
மனத்தியல்ப தாகும் அறிவு" (குறள், 452)

என்னும் குறளை இவர் அம்புலிப் பருவப் பாடலில் எடுத்தாண்டுள் ளார்.

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பல்பண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
புலிபொறித்துப் புறம்போக்கு" (பட்டினப்.129–135)

என்று கடற்கரைத் துறைமுகக் காட்சியை நம்கண்முன் கொண்டு வந்து காட்டிவிடுவார். இக்காட்சியைப் பிள்ளைத்தமிழாசிரியர்,

"முற்று கடற்றிசை மீதுதி ரைக்கலம்
முறைமுறை யாய்வரவும்
முத்திரை யிட்டவை தத்துக டற்றுறை
மீதுகு வித்திடவும்..." (பாவேந்.பிள்.ப.38)

என்று சுட்டிப் போகின்றார். திருமுருகாற்றுப்படையை நக்கீரர் பாடியமையை இப்பிள்ளைத் தமிழாசிரியர்,

"முருகின் ஆற்றுப் படையளித்த
முன்னோன்..." (மேலது, ப.80)

எனக் குறிப்பிடுவது கொண்டு நாம் தெளியலாம்.

சிலப்பதிகாரச் செய்திகளை எல்லாம் பாவேந்தர் பிள்ளைத் தமிழ் நூலில் ஆசிரியர் பயன்படுத்தித் தம்முடைய பழந்தமிழ் இலக்கிய ஈடுபாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

அடைமொழித்தமிழ்

பாவேந்தர் பற்றிப்பாடும் போது அன்னைத் தமிழின் சிறப்பையும் சீரையும் அடைமொழிகளுடன் கூறிச் செல்லும் இந் நூலாசிரியரின் தமிழ்ப்பற்றின் ஆழ அகலங்களை நாம் நன்கு அறிந்தின்புறலாம். இங்கே சிலவற்றைக் காண்போம்:

அமுதத்தமிழ் (பாடல்,41), ஆண்டதமிழ் (97), இளந்தமிழ் (27) கனிதமிழ் (35), சிந்தாமணித்தமிழ் (83), பழகுதமிழ் (90), பொங்கு தமிழ் (28), மணித்தமிழ் (39), அமுதின் இனியதமிழ் (50), அரிய திணைகள் கெழுதமிழ் (60), உயர்தனிச் செந்தமிழ் (8), கருவில் திருவோடு உதித்ததமிழ் (79), கலைவளம் முழுவதும் ஒத்து முகிழ்த்த தமிழ் (40), சங்கமறிந்து வளர்ந்த செழுந்தமிழ் (21) செழுமென் கொடியாம் தமிழ் (26), திருவோடு மேனின்ற திருவானதமிழ் (65), மனத்தவிசிலங்கு தமிழ் (70), மீனுலவி ஆடு கொடிமேல் வைத்த தமிழ் (54). இப்படிப் பலவாறு தமிழை அழைத்து மகிழும் அழகே அழகு. இவைபோல இன்னும் பல அடைமொழிகள் பொருந்துமாறு தமிழை இந்நூலாசிரியர் அழைத்து மகிழ்கிறார். இதேபோன்று இவர் தமிழன்னையையும், தமிழ் அரசினையும், தமிழ்க்குடியையும் தமிழ்ச் சங்கத்தினையும் வியந்து போற்றும் பாங்கு நாம் எண்ணி மகிழ்வதற்கு உரியதாகும்.

இயற்கை வளமும் கற்பனைச் செழிப்பும்

பொதிகைமலையில் பிறந்துவரும் தென்றலின் இனிமையை இவர்,

"பொதிகையி னறுமண மலரொடு குலவியெ
முந்தே வந்தாடும்

புலவர்கள் கவிமன மெழுதிய புகழ்தரு
தென்பூ மென்காற்றில்
கதியொடு பொறிவரி மதுகர மதனிசை
யாழே போலாகும்" (பாவேந்.பிள்.ப.21)

எனப்பாடுகின்றார். பொறிவண்டுகள் பாடும் இசை இவருக்கு யாழிசை போலத் தோன்றுகின்றதாம்.

கார்காலத்து மாலைப்பொழுதில் காடுகளில் பூத்த முல்லை மலர்கள் எல்லாம் மலர்ந்து மணம் பரப்பும் காட்சியை இப்புலவர்,

"கார்கொண்டு வருகின்ற மாலைக்குக் காடெல்லாம்
கைமுல்லை வாய்திறப்பக்
கால்கொண்டு நடவாத கால்தென்றல் தும்பிக்குக்
கைச்செய்கை செய்து காட்ட" (மேலது, ப.85)

என்று கற்பனை செய்து பார்த்து நமக்கும் சொற்காட்சியில் விளக்கிக் காட்டும் இவருடைய புலமை வளம் போற்றுமாறுள்ளது. இதன்கண் வரும் தற்குறிப்பேற்றமும் காணத்தக்கது.

சிற்றிடை மாதர்களின் கைவளையல்களின் ஓசை கேட்ட கயல் மீன்கள் துள்ளிக் குதித்தனவாம்; துள்ளிய மீன்கள் அம்மலையில் வளர்ந்துள்ள பாலாவின் கனிமீது மோதியமையால், அதன் தேன் அருவிபோல் வடிகிறதாம். இதோ அக்கற்பனை:

"..... ....மாதரவர்
கைவளையின் ஓசை கேட்டுக்
கயல்மீன் புரண்டெழுந் தேககன முகடளவு
கனவரையின் வேர்வருக்கை
முள்ளுண்ட கனிமீது மோதவும் அதுசிதறி
முதுசுவைத் தேனி றாலில்
முட்டிக் கிழித்தருவி பட்டுத் தவழ்ந்துவரு
முதுதமிழ்...... ....." (பாவேந். பிள்.ப.48)

வாரானைப் பருவப்பாடல் ஒன்று. சிறப்புகள் நிறைந்துள்ள புதுச்சேரியைத் தற்குறிப்பேற்ற அணி பொருந்தப் புலமைப்பித்தன் பாடும் கற்பனை நம் கண்முன் ஒரு திரைப்படம் போல் விரிகின்றது. பாண்டியில் இருக்கும் ஒரு பொழில். அங்குள்ள குயில்கள் இசை

பாடும். அவ்விசையைக் கேட்ட அழகு மங்கையர் தம் இடைவருந்த நடந்தனர், அந்நடையைக் கண்ட கமுகு கிளுக்கென்று நகைத்த தாம். ஒளிமிகுந்த கொன்றை மரம் பொன்னிறப் பூக்களைத் தென்றல் காற்று அசைத்தமையால் தரையில் உதிர்த்தன. அது பொற்பரிசு நல்குவது போல் விளங்குகிறதாம். நடம் செய்யும் மகளிருடைய முகத்துத் தோன்றிய வியர்வையைத் துடைத்துத் தென்றல்காற்றுக் குளிர்விக்கும். இப்படிப்பட்ட நிறைந்த சிறப்புகள் பலவுடைய புதுச்சேரி என்கிறார். இதோ அப்பாடல்:

"பல்குஞ் சிறப்பின் அணிமாடப்
பாண்டிப் பதியின் பொழிலிருந்து
பயில்பூங் குயில்தான் டளிர்கோதிப்
பாடும் இசைக்கு மடநல்லார்
ஓல்குங் கொடிநுண் ணிடைவருந்த
உதவும் நடத்தில் மனமயங்கி
உயர்பூங் கமுகு நகைமுகிழ்ப்ப
ஒளிர்பூங் கொன்றை பொலம்பரிசில்
நல்கும் தென்றற் காற்றசைந்து
நடஞ்செய்ய மகளிர் நுதல்வேர்வை
நாடித் துடைத்துக் குளிர்வித்து
நடக்கும் தரள வளங்கொழித்து
மல்கும் சிறப்பின் புதுவைநகர்......" (மேலது, ப.60)

பாவேந்தர் பிள்ளைத்தமிழில் நயம்

புலமைப்பித்தன் இலக்கணத்தில் ஈடுபாடு கொண்டவர் என்பதால் உவமை கூறுவதில் கூட இலக்கணக் கூறுகளைக் காட்டிப் போகின்றார்.

"மைவண்ண இருளிலே மதிவண்ணம் இல்லது
"மகரக் குறுக்கமேபோல்"
மன்பதையில் முன்னாளில் மல்கியுள சீரெல்லாம்
மறையவே தோயு நாளில்" (மேலது, ப.16)

செங்கீரைப்பருவப் பாடலில் (ப.18) ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களைச் சுட்டிப் போகின்றார். பாவேந்தரை இவர் 'கவிதைக்

கொற்றவனே' என்றும், 'காலப் புயலே' என்றும், 'இளந்தமிழ் மன்ன வனே' என்றும், 'தமிழ் கொட்ட வந்தவன்' என்றும், 'அருளுற வருவமு தத்தமி ழுக்கோர்த வப்பேறே" என்றும், 'புறநானூற்றைப் புதுக்கியதோர் புரட்சிக் குயிலே" என்றும், 'உடையதில் தனி உடமை ஆழ்த்திட வருபுலியே' என்றும் போற்றிப் பேசுவது நூலாசிரி யருக்குப் பாவேந்தரிடம் இருந்த ஈடுபாட்டைத் தெளிவுறுத்தும்.

பாவேந்தரின் பாடல்களை மதிப்பீடு செய்யும் போக்கில் புலமைப்பித்தன் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களினூடே அதனைப் பதிவு செய்துள்ளார். பாவேந்தரின் பாடல்கள் உணர்ச்சியூட்டித் தமிழுணர்வைச் செழிக்க வைத்தவை. தமிழின் நலத்தைக் கெடுப் பவரைச் சொல்வலையில் அகப்படுத்தும் பாடலடிகள்! சொல்லால் சுடுவதும் வீரம் செறிந்து விளங்குவதும் பாவேந்தர் பாடல்களில் காணப்பெறும் சொல்வீச்சு! இதோ ஒரு சான்று:

"பொய்கைப் புனலில் விளையாடப்
புகுவார் போலத் தமிழ்க்குவரு
பொல்லாப் பகையை வீழ்த்துவதற்குப்
பொங்கிக் குமுறும்தீவளர்த்து
மெய்யின் தசைநார் எலும்போடு
வெடித்துச் சிதறச் தம்முயிரை
விலையாய்க் கொடுத்த தமிழ்மறவர்
வீரம் விளைத்த துன்பாடல்" (மேலது, ப.58)

தமிழன்னையைப் பிடித்த தளைகளைக் கண்டு குமுறி, அத் தளைகளை அறுத்தெறிய வீறுகொண்டெழுந்தன பாவேந்தரின் பாடல்கள். இதோ அந்த மதிப்பீடு:

"கொடுமைக் கிடையில் தமிழன்னை
குமுறிப் புலம்பும் நிலைகண்டு
பிணித்துக் கிடந்த தளையதனைப்
பிறங்கும் கவிதை ஒளிவாளால்
பிழைபட் டொழிய அறுத்தெறிந்த
பெம்மான்!" (மேலது, ப.59)

"கண்வைத்த திசையெல்லாம் கப்பம்வைத் தேதொழும்
காலம் மறைந்த தென்று
தூல்வைத்தெ முந்தமுகில் சுப்புரத் னங்கவிதை." (மேலது,ப.12)

பாவேந்தர் பாடல்கள் தமிழுணர்ந்தோரைக் கொந்தளித்து எழுமாறு செய்தது. ஆமாம்! பாவேந்தர் பாடல்கள் தமிழ்க்காப்புணர்ச்சியை ஊட்டிற்று. அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, குறிஞ்சித்திட்டு, பாண்டியன் பரிசு போன்ற பாவேந்தரின் பைந்தமிழ்ப் படைப்புகளின் பெயர்களையும் புலமைப்பித்தன் சுட்டிப் போகின்றார்.

"தண்டூன்று முதியவரும் தமிழ்த்தொண்டி னாளிளமை
தனையெய்த லாகு மென்ற
தத்துவ மெமக்குதவி முத்தமிழ்த னக்குவரு
தடையெலாம் தூள்படுத்திப்
பண்டூன்றி நிலைநின்ற பைந்தமிழ்ப் புகழெலாம்
பார்மிசை புதுக்க வந்தாய்" (மேலது, ப.53)

என இளமைத்துடிப்பைப் பாய்ச்சும் பாங்கினை இப்புலவர் எடுத்துரைப்பார். சேரன் செங்குட்டுவன் கனகவிசயர் மணிமுடி சிதர வைத்த செய்தியை (70ஆவது பாடல்) எடுத்துச் சொல்வார். இந்தி எதிர்ப்பைப் பல இடங்களில் நூலாசிரியர் சுட்டிப் போவதனையும் காண்கிறோம்.

தமிழின் சுவையைக் கூட்டுவது சந்தப் பாடல்கள் ஆகும். புலமைப்பித்தன் தம் பிள்ளைத்தமிழில் சந்த நயம் தோன்றச் செந்தமிழ்ப் பாடல்களையும் பாடியுள்ளார். இதற்கு ஒரு சான்று காண்போம்:

"நீலம ணிக்கடல் ஓல மிடத்தனி
நித்திரை கொண்டவனாம்
நின்கவி கொண்டொரு புன்பகை வென்றெம்
நெஞ்சினில் நின்றவனாம்!
பாலவை மூன்றினில் ஞால மளந்து
பரந்து கிடந்தமறை
பாடு மொழிப்பொருள் தேடி யுணர்ந்து
படிக்க விரிந்த பொருள்

போலந டந்தொளி கால வருங்கதிர்
போன்று மிளிர்ந்த வனாம்
பூத்த மனத்தவர் மூத்த உடன்பிறப்
பென்று பிறந்தவனாம்
மோலிபு னைந்த மதிக்கர சோங்க
முழக்குக சிறுபறையே!
முத்தமி ழிற்கவி வித்தக நின்று
முழக்குக சிறுபறையே!" (மேலது, ப.89)

தொடைநயங்கள் இந்நூற்கண் சிறந்து விளங்குவதும இவண் எண்ணத்தகும். முரண்தொடை நயத்தை,

"இரவு கெடவென வரவு தருகதி
ரொடுஇவ ளுதயமு மெய்படத் தோன்றினள்" (மேலது,ப.3)
"இரவுப் பொருளது பகலுக் கெதிரது" (மேலது, ப.29)
"தலைநாள் இதுவென எதிர்நாள் வருகென" (மேலது, ப.29)
"காரேறி ஏறிக் கணுக்கால் தளர்ந்திடக்
கை யற்று வீழ ஓங்கும்" (மேலது, ப.94)

எனவரும் பிள்ளைத்தமிழ்ப் பாடலடிகளில் காண ஒண்ணும். மங்கையர்கள் இளங்குமரர் உயிரைக் கவர்ந்து, அதனை நீலமலருடன் சேர்த்துக் கூந்தலில் முடிக்கும் என்பதனைப் புலமைப்பித்தன் பின் வரும் பாடலில் கூறியுள்ளார். கவிதைநயமும் கற்பனை வளமும் கனிந்து விளங்கும் பாடல் அடிகள் இதோ:

"வையேந்து வேலுக்கு வளையேந்து மாதர்விழி
வந்தொப்பு நோக்கி நோக்கி
வடிவாய் இளங்குமரர் உடல்போழ்ந் தியங்குமயிர்
வாரிக்க ருங்கு ழற்கு
மையேந்து நீலமொடு மற்றவர்தம் ஆருயிரும்
மலராகு மென்று சூடும்
மங்கையவர் குரவையிட........." (மேலது, ப.100)

சொன்னயம், பொருள் நயம் எல்லாம் நிறைந்து புலமை வளம் செறிந்து விளங்குவது பாவேந்தர் பிள்ளைத்தமிழ் என்பது மிகவும் பொருந்தும்!

முடிவுரை

தமிழின் திறம்பாடிக் காக்க வந்த புரட்சிக்குயிலாக விளங்கியவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். அவருடைய படைப்புகளை, ஆளுமைத்திறனை ஞாலத்திற்கு எடுத்துரைக்க எண்ணிய கவிஞர் புலமைப்பித்தன் பாவேந்தரைக் குழந்தையாக்கிப் பிள்ளைத்தமிழ் படைத்துள்ளார். பைந்தமிழ் மரபு வழியில் "பாவேந்தர் பிள்ளைத் தமிழ்" அமைந்துள்ள பாங்கினை ஓரளவு இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொண்டோம். இப்பிள்ளைத்தமிழ் நூலில் ஆய்வதற்குரிய கருத்துக்கள் நிரம்ப உள என்பதால் அதனை விரிப்பின் அகலும் தொகுப்பின் அஞ்சும்!

பயன்பட்ட நூல்

பாவேந்தர் பிள்ளைத்தமிழ், புலவர் புலமைப்பித்தன், அண்ணா பதிப்பகம், சென்னை - 4, இரண்டாம் பதிப்பு, 1978.

தேவார இலக்கியத்தின் தோற்றமும் சமூகப் பின்புலமும்

முனைவர் உ.கருப்பத்தேவன்,
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

சென்ற இதழின் தொடர்ச்சி

"உருகி ஊன் குலைந்து ஏத்தி எழுமின்" (அப்பர் 5,75.9)
"அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி"

என்னும் திருமூலர் வாக்கும் ஒப்புநோக்குத் தக்கதாகும்.

சமயக்குரவர் நால்வரும் சிவநெறி மீண்டும் தமிழகத்தில் தழைத்தோங்கச் செய்தவர்கள். சிவநெறி, வேததத்தின மையக் கருத்தாகும். திருஞானசம்பந்தர் வேள்வியைப் பற்றியும், அந்தணர் கள் வேதமோதி அழல் ஓம்புதல் பற்றியும் குறித்துள்ளார். சீர்காழியின் அந்தணர்களும் தம் தந்தையும் வேள்வி செய்வதற் காகச் சம்பந்தர் திருவாவடுதுறை இறைவனிட மிருந்து பொன் பெற்றுக் கொடுத்துள்ளார். சமணர்களால் மறைக்கப்பட்ட கோயில் வழிபாடு மீண்டும் நடைபெற வேண்டும் என்பதற்காக அப்பர் உண்ணா நோன்பு மேற்கொண்டார். சுந்தரர், திருவாரூர்த் திருவிழா வின்போது அடியவர்களுக்கு அமுதூட்ட சிவனிடம் பொன் வேண்டிப் பெற்றார். இவை தமிழ்நாட்டில் சிவநெறியை மீண்டும் நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகளாகும்.

சிவன் வேதத்தின் விழுப்பொருள்

சிவபெருமானே வேதத்தின் விழுப்பொருள் ஆவான். வேதத்தின்படி சிவனே இறுதியாக அடையப்பெறும் ஞானம் ஆகும். வைதிக நெறியிலமைந்த வழிபாடு மறைவழக்கம் எனவும், வைதிகம் எனவும் வழங்கப்படுகின்றது. இதனைப் பின்வரும் தேவாரப் பாடலடிகளால் அறிய முடிகின்றது.

"ஆரணப் பொருள் (5.68.:2, 5:81:2)
"வேதத்தின் பொருள் (4.64:1)
"மறைபொருளும் ஆயினான்" (6,49:1)
"மறைவழக்க மில்லாத மாபிகள்" (3.108.3)

"வைதிக வழியொழுகாத" (3:108:2)

திருநீற்றின் மகிமை

தேவாரப் பாடல்கள், சிவனிடம் அன்புகொண்டு ஒழுகு மாறு பேசுகின்றது. உருத்திராக்கம் அணிவதையும், திருநீறு பூசுவதையும் வலியுறுத்துகின்றது. சைவத்தில் திருநீறே தந்திரமும் மந்திரமும் ஆகும். அது சிவன் கொடுத்ததாகும். திருநீறணிந்தவர் யாவாரா யினும் அவரை வணங்குதல் வேண்டும். திருநீறு வினையை ஒழித்து நோய் நீக்கும் மருந்தாகும் 'முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்' என்கிறார் சுந்தரர் (திருத்தொண்டத் தொகை, 7, 39, 10) சைவ இறையடியார்களுக்கு திருநீரைப்போல ஐந்தெழுத்து மந்திரமும் இன்றியமையாதது.

"செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"
(சம்பந்தர், தேவாரம், பா.எண். 3: 22: 2)

சிவனடியார்களைச் சிவனாகவே கருதி வழிபட வேண்டு மென சுந்தரரின் திருத்தொண்டத் தொகையிலுள்ள பதினோரு பாடல் களும் குறிக்கின்றன.

சமயக் குரவர்களின் ஆன்மீக நெறிகள்

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் முதலி களும் பாடிய திருப்பாடல்கள் 'தேவாரம்' எனப் போற்றப்படு கின்றது. இம்மூவரும் பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றிப் பாடியுள்ளனர். ஆனால் இன்று நமக்குத் திருஞான சம்பந்தர் பாடியதாக 4158 பாடல்களும், திருநாவுக்கரசர் பாடிய தாக 3066 பாடல்களும், சுந்தரர் பாடியதாக 1026 பாடல்களுமே கிடைத்துள்ளன. மாணிக்கவாசகரையும் இவர்களோடு இணைத்துச் சமயாசாரிகள் நால்வர் என்று கூறும்போது இவர்கள் நால்வரும் நான்கு வகை யான ஆன்மீக மார்க்கங்களைத் தம் வாழ்க்கையில் பின்பற்றிய வர்கள் என்பதை அறிய முடிகின்றது.

திருஞானசம்பந்தர், சத்புத்திர மார்க்கத்தையும் (மகன்மை நெறியையும்) அப்பர் தாசமார்க்கத்தையும் (தொண்டு நெறியை யும்), சுந்தரர் சகமார்க்க நெறியையும் (தோழமை நெறியையும்), மாணிக்கவாசகர் சன்மார்க்க நெறியையும் (மெய்ந்நெறியையும்)

பின்பற்றினர். இந்நெறிகள் பிற்காலத்துத் தோன்றிய சைவ சித்தாந்த சாத்திரங்களில் விரிவாகவும், விளக்கமாகவும் கூறப் பட்டுள்ளன. சைவ ஆகமங்களில் குறிக்கப்படும் நால்வகை நெறிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியனவற்றுக்கு அடிப்படையாக அமைந்தன.

அப்பர் பாடல்களில் காணப்படும் கருத்துக்களும், கோயில் களில் புல்லைச் செதுக்கிச் செப்பணிட மேற்கொண்ட உழவாரத் திருப்பணிகளும் 'சரியை' நெறியை விளக்குகின்றன. திருஞான சம்பந்தர், இறைவனைத் தம் தந்தையாகவே கண்டார். இறைவன் புகழைப் புறத்தே பாடுதலும், அகத்தே நினைத்தலும் 'கிரியை' நெறியாக அமைந்தன. கிரியை என்பது சடங்குகளையும் குறிக்கும்.

சுந்தரர், சிவனோடு எப்போதும் கருத்தால் ஒன்றியிருந்தர். தோழமையுடன் சிவனுடன் உறவு கொண்டிருந்தார். சுந்தரர், தம் காதலியைக் காணும்போது சிவனருளையே காணுகின்றார். மாணிக்க வாசகர் முறைப்படி தீட்சை பெற்றவர். சைவசித்தாந்த சாத்திரங் களில் குறிப்பிட்டபடியே மனிதவடிவில் குருவாக வந்த சிவனிடம் ஞானதீட்சை பெற்று ஞானநெறிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றார்.

பக்தி நெறி

அன்பின் முதிர்ச்சியாகிய ஆர்வமே, 'பத்தி' என்ற பொருளில் வழங்கி இருக்க வேண்டும்.

"அழிவில முயலும் ஆர்வமாக்கள்
வழிபடு தெய்வம் கண்டாங்கு" (நற்.1)

இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்றலையே தமிழ்ப் பாடல்கள் 'பக்தி' எனக்குறிப்பிடுகின்றன. திருமந்திரம், இறை வனோடு ஆன்மாக்கள் கொண்டுள்ள நெருக்கத்தை அடிப்படை யாகக் கொண்டு அவ்வடியார்களை,

பக்தர் சரியை நெறியாளர்
தொண்டர் கிரியை நெறியாளர்
சாதகர் யோகிகள்
சித்தர் ஞானிகள் (திருமந்திரம், 1446)

என நான்கு நிலையில் பேசுகின்றது. ஆயினும் இற்றவணி டத்தில் கொள்ளும் தூய அன்பாகிய பக்தி, ஞானமில்லார்க்குத் தோன்றாது என்பதை மாணிக்கவாசகர் அச்சோப்பத்து என்னும் பதிகத்தில்,

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அகல்வித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். ஞானத்தை அறிவினால் தெளிவதாகவும், பத்தியை உணர்ச்சியினால் ஒன்றுவதாகவும் கொள்ளலாம்.

சரியை திருக்கோயில் தொண்டும் வேள்விகள் செய்ததுமாகும்

கிரியை அருச்சனை அங்கி காரியமாகும்

யோகம் மூச்சடக்கி மூலக்கனலையெழுப்பி ஆறாதாரங் களின்வழி மேலேற்றிச் சோதியினை நினைத்திருத்தல்

ஞானம் காண்போன், காட்சி, காணப்படுபொருள் இவற்றின் கண் வேறுபாடின்றி அத்துவிதமாதல்.

சைவ அடியார்கள் பிறப்பினால் பல்வேறு சமுதாய நிலை யினராக இருப்பினும் அனைவரையும் தொண்டர் குலமாகவும், திருக்குலமாகவும், அடியார் இனமாகவும் மதிப்பளிக்கத் தூண்டியது பக்திநெறியே ஆகும். சிவனடியார்களாக வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களும் பிறப்பால் பல சாதியினர். சிறப்பால் ஓரினத்தார்; அடியார் இனத்தவர் என்பதை உணரலாம்.

செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	தலைவர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	செயலாளர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. ச.தசரதராமன் B.A.,B.L.,	உறுப்பினர்
திரு. து.மாயராசன் B.Sc., B.L.,	உறுப்பினர்
திரு. இரா.ஜெகனாதன் B.E.,	உறுப்பினர்
திரு. லெ.சிவக்குமார் B.E.,	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc.,	உறுப்பினர்
திரு. கி.ராஜாராம் B.A.,	உறுப்பினர்
முனைவர் அ.செல்வமணி	பல்கலைக்கழக நியமன உறுப்பினர்
முனைவர் சு.விஜயன்	உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா	உறுப்பினர்

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்,** காமராஜர்சாலை, மதுரை-9.